# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 259/மா/2017

ஆணை எண். 298/2017

நாள் : 26/12/2017

திரு T. ராஜமாணிக்கம்,
திருநெல்வேலி. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை. – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி, சுத்தமல்லி, எண்.463, K.M. காம்ப்ளக்ஸ், பெரியார் நகர் முகவரியில் வசிக்கும் திரு T. ராஜாமணிககம் அவர்களின் 18.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 20.12.2017 அன்று பெறப்பட்டு, 259/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி, சுத்தமல்லி, எண்.463, K.M. காம்ப்ளக்ஸ், பெரியார் நகர் முகவரியில் வசிக்கும் திரு T. ராஜாமணிக்கம் என்பவர், சென்னை கொடுங்கையூர், சாஸ்திரி நகர், பிரதான சாலை எண்.12/13, அருள் நகர் சாலையில் செயல்பட்டு வரும் கே.டி.வி. ஹெல்த் புட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர், பிரிய கண்ணன் டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தின் பெயரில் கொடுங்கையூரில் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் எனத் தெரிவித்து அதனை அகற்றக் கோரி சென்னை மாநகராட்சி ஆணையருக்கு முறையீடு செய்துள்ளதுடன், அம்மனுவின் நகலை இம்முறைமன்ற நடுவத்திற்கும் அனுப்பியுள்ளார். மனுதாரரின் முறையீட்டு மனு உரிய படிவத்தில் தாக்கல் செய்யப்படாததுடன் போதுமான கட்டணத்திற்கான நீதிமன்ற வில்லையும் ஒட்டப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனுவினை இம்முறைமன்ற நடுவம் தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

**திரு T. ராஜமாணிக்கம்,**
**463– K.M. காம்ப்ளக்ஸ்,**
**பெரியார் நகர்,**
**கத்தமல்லி,**
**திருநெல்வேலி – 627 604.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்